# தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

## CSI Tamil Parish Al-Ain, UAE



## மன்னா..

சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக; கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும் போது, யாக்கோபுக்குக் களிப்பும், இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்..

-சங்கீதம்:14:7

Oh, that salvation for Israel would come out of Zion! When the Lord restores the fortunes of his people, let Jacob rejoice, let Israel be glad.

- Psalm:14:7

MAY '2022

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| SAT<br>5.00 PM<br>6.30 PM | CHILDREN'S BIBLE SCHOOL<br>GENERAL ASSEMBLY & BIBLE CLASSES<br>MRS. AUGUSTA LAWRENCE @ 056 641 1676 |
| WED<br>7.30 PM | BIBLE STUDY<br>EVERY WEDNESDAY<br>CONTACT: THE PRESBYTER |
| SAT<br>7.45 PM<br>9.30 PM | 1 ST & 3 RD WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| SAT<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SATURDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN’S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN’S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 4TH FRIDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |

# FROM THE PASTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!
ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திரு பெயரில் திருச்சபை குடும்பத்தார் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றி திராட்ச ரசமும் பாலும் கொள்ளுங்கள்.**

**– ஏசாயா:55:1**

"COME, EVERYONE WHO THIRSTS, COME TO THE WATERS; AND HE WHO HAS NO MONEY, COME, BUY WINE AND MILK WITHOUT MONEY AND WITHOUT PRICE.

**- ISAIAH:55:1**

- உழைக்கும் மக்களோடு உடன் இருக்கும் ஆண்டவர்
  - ஏசாயா:55:1-13
- உழைக்கும் மக்களை நம்பிக்கை கொள்ள அழைக்கிறார்.
  - ஏசாயா:55:1,2
- உழைக்கும் மக்களுக்கு நல்வாழ்வை கொடுக்கிறார்..
  - ஏசாயா: 55:3
- உழைக்கும் மக்களுக்கு உழைப்பின் பலனை க் கொடுக்கிறார்...
  - ஏசாயா:55:10,11

இவ்வாறு உழைக்கின்ற மக்களோடு இருந்து செயல்படுகிற நமது ஆண்டவரிடமிருந்து நம்முடைய உழைப்பின் பலனை பெற்றுக்கொள்ள நம்மையும் அர்ப்பணிப்போம்.

**மே தின வாழ்த்துக்கள் (உழைப்பாளர் தினம்)**

உழைக்கும் மக்கள் அனைவருக்கும் உலக மே தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்...

தொடர்ந்து கடந்த நாட்களில் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகள், ஆராதனைகள் குறிப்பாக **40-நாள் லெந்து கால தினதியானம், பரிசுத்த வாரம் ஆராதனைகள், வியகுலவியாழன், பெரிய வெள்ளி, ஈஸ்டர் ஆராதனை** இவைகள் சிறப்பாக நடைபெற ஆண்டவர் செய்த எல்லா கிருபைகளுக்காக நாம் இணைந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.இதற்காக எல்லா நிலைகளிலும் ஒத்துழைப்பு கொடுத்த திருச்சபையின் நிர்வாக குழுவினருக்கு, திருச்சபை மூப்பர்கள், திருச்சபை விசுவாசிகள் குறிப்பாக **மீடியா டீம்** Mr.மெல்பின் பால், Mr.சந்தோஷ், Mr.கில்டன் மற்றும் கீபோர்ட் வாசித்து உதவி செய்த Mr.ஜெயக்குமார், Mr.பெல்பர் ஜான் அனைவருக்கும் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன் **நமது திருச்சபை ஆண்டு விழா (13TH CHURCH ANNIVERSARY)** கடந்த மாதம் ஏப்ரல் 23 -ஆம் தேதி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நமக்கு இந்த தேசத்தில் இந்த திருச்சபையை உருவாக்கித் தந்த நமது திருச்சபையின் மூத்த உறுப்பினர்கள், (மூப்பர்கள்) அவர்களின் குடும்பத்தினர், இந்த திருச்சபையில் திருப் பணியாற்றிய போதகர்கள் அவர்களின் குடும்பத்தினர் மற்றும், நமது திருச்சபையில் பங்கு பெறுகிற குடும்பத்தினர், பொறுப்பாளர்கள், திருச்சபையின் திருப்பணியிலே தங்களை இணைத்துக் கொள்கிற அனைவருக்காகவும் ஜெபிக்கவும், நினைவுகூறவும், ஆண்டவருக்கு நன்றி செலுத்தவும் அழைக்கப்பட்டோம். இந்த சிறப்பு ஆராதனையில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கடவுளின் வார்த்தையை பகிர்ந்து கொண்ட

**REV.DR. ராஜமாணிக்கம். PRESBYTER, CSI.TAMIL PARISH- SHARJAH**

அவர்களுக்கும். ஆயரம்மா, பிள்ளைகளுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆண்டு விழா சிறப்பாக நடைபெற ஜெபித்த, உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## கொரிஜ்ஹோலா ஆலயம் கட்டுமான திட்டம் -KORIJHOLLA CHURCH PROJECT







நமது திருச்சபையின் ஆண்கள் ஐக்கிய சங்கம் சார்பிலும் திருச்சபையாகவும் ஒடிசா மாநிலத்தில் உள்ள கொரிஜ்ஹோலா பகுதியில் ஒரு சிறந்த ஆலயம் கட்டிமுடிக்கவும், பிரதிஷ்டை செய்யவும் ஆண்டவர் கிருபை செய்தார். ஆண்டவருக்கே எல்லா துதியும், கனமும் உண்டாவதாக! இந்த கட்டுமான பணியில் தங்களை இணைத்துக்கொண்டு ஜெபித்த தங்களின் பங்களிப்பான காணிக்கைகளை கொடுத்து உதவிய அனைத்து ஆண்கள் ஐக்கிய சங்கத்தினர் மற்றும் திருச்சபையார் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆலய கட்டுமானப் பணிக்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து செயல்பட்ட நமது திருச்சபையின் மூத்த அங்கத்தினர் திரு. நெல்சன் சோபித ராஜ் அவர்களுக்கும். அவர்களுடன் இணைந்து செயல்பட்ட அனைவருக்கும் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்ந்து நமது திருச்சபையில் Online Zoom வாயிலாக நடைபெறும் அனைத்துக் கூடுகைகள் மற்றும் ஆலயத்தில் நடைபெறும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தொடர்ந்து நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும். தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலைவாய்ப்புக்காக, பொருளாதாரத்திற்காக, வேலையில்லாமல் கஷ்டப்படுகிற ஒவ்வொருவராகவும். நமது திருச்சபையின் குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கவும் அழைக்கப்படுகிறோம்.மேலும்

திருச்சபையின் வளர்ச்சியிலும், ஊழியத்திலும்,திருச்சபை குடும்பங்களிலும், நமது பிள்ளைகளின் வாழ்விலும், கல்வியிலும்,புதிய தொடக்க கல்வி ஆண்டிற்காகவும் எதிர்காலத்திற்காகவும் ஆண்டவர் அநேக ஆசீர்வாதங்களை கொண்டுவரும் படியாய் ஜெபிக்கும்படியாகவும். அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்........

Rev.S.P.Baskar



# இறைப்பற்றைச் செயலில் காட்டா அறிவிலிகள் (மதிகெட்டவர்கள்)

சங்கீதம்:14

**சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக; கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும் போது, யாக்கோபுக்குக் களிப்பும், இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்..**

**-சங்கீதம்:14:7**

OH, THAT SALVATION FOR ISRAEL WOULD COME OUT OF ZION! WHEN THE LORD RESTORES THE FORTUNES OF HIS PEOPLE, LET JACOB REJOICE, LET ISRAEL BE GLAD.

- PSALM:14:7

**முன்னுரை**

*14-ஆம் சங்கீதமும் 53-ஆம் சங்கீதமும் ஒரே கருத்தைக் கொண்டவை ஆகும். இந்த 14-ஆம் சங்கீதத்தில் தேவன், கர்த்தர் ( யாவே) என்று பலமுறை வருவதை காணலாம். இந்த 14-ஆம் சங்கீதம் தென்னாட்டிலே எருசலேம் வழிபாட்டுச் சூழலில் எழுதப்பட்ட பாடலாகும். 53-ஆம் சங்கீதம் வட நாட்டிலே கானானிய சூழலில் எழுதப்பட்ட (அ) பாடப்பட்ட பாடலாகும். இந்த சங்கீதத்தில் தீவினை செய்வோர் பற்றியும், தீயோராவது (அறிவிலிகள்) பற்றியும் விளக்கங்களை காணலாம் மற்றும் மனிதரின் மாண்பு குறித்து சொல்லப்படுகிறது. மனிதரின் வீழ்ச்சியைக்குறித்தும் சொல்லப்படுகிறது. எனது இந்த சங்கீதம் இறைப்பற்றைச் செயலில் காட்டாத மனுக்குலத்தின் தன்மையைக் குறித்து புரிந்துக் கொள்வது ஆகும்.*

PSALM:14- THIS IS A COMMUNITY LAMENT. HUMANS IN GENERAL DO NOT SEEK AFTER. GOD AND THUS THEY TREAT GOD'S PEOPLE CRUELLY, COMPARE PSALM:53

**1. சங்கீதம்:14:1-3: கடவுளை நாடுவோர் (செயலில் காண்போர்) எவருமில்லை.**

**வச:1 தேவன் இல்லை என்று மதி கெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான்.**

இது ஆண்டவர் உலகில் செயலாற்றும் தன்மையை மறந்து ஆண்டவர் நல்லது செய்கிறார், ஏழைகளுக்கு, எளியோருக்கு உதவுகிறார். எனவே மனுகுலமும் இத்தகைய செயல்களை செய்ய வேண்டும் என்று விரும்புகிறார். இவ்வாறு செய்யாதவர்களை தான் அறிவிலிகள் (அ) மதி கெட்டவர்கள் என்றும் இவர்கள் ஏழை மக்களை விழுங்குகிறவர்கள் என்றும் இப்படிப்பட்டவர்கள் தான் ஆண்டவரை மறுக்கிறார்கள். **'தேவன் இல்லை என்று மதி கெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான்"** இங்கு சொல்லப்படும் மதி கெட்டவன் (அறிவிலிகள்) ஆண்டவரின் சிந்தனையை கொள்கையை மறுப்பவர்கள் அல்ல அவரை ஏற்றும் அவர் வழியில் நடக்காதவர்களை குறிப்பிடுவது ஆகும். அதாவது ஆண்டவரின் தன்மையாகிய நீதி, அன்பு, உண்மை இவற்றை வாழ்விலும், செயலிலும் காட்டாதவர்கள் ஏழை எளியோரைக் கசக்கிப் பிழிந்து துன்புறுத்தித் அழிப்பவர்கள் ஆவார்கள்.

**வச;2-தேவனை தேடுகிற உணர்வுள்ளவன்** இவர்கள் அன்பு, நீதிச் செயல்களில் ஈடுபடுபவர் இவர்கள்தான் உண்மையிலே ஆண்டவரை அறிந்தவர்கள், ஆண்டவரை நாடுகிறார்கள் ஆவார்கள்....

**வச:3-நன்மை செய்கிற......... ஒருவனாகிலும் இல்லை** இது மனிதர் அனைவருமே அன்பு அற்றவர்களாக, நேர்மை தவறியவர்களாக இருக்கிறவர்கள் என்பதை மிகைப்படுத்தி சொல்லப்படுகிறது.

**2. சங்கீதம்:14:4-6: எளியோரைத் துன்புறுத்துவோர் கடவுளை அறியார்**

**வச:4- அக்கிரமக்காரரில் ஒருவனுக்கும் அறிவு இல்லையோ?** இது கடவுளை நாடி நல்லது செய்பவர் எவரும் இல்லையே (சங்கீதம்:14:1-3) என்ற ஏக்கம் ஆகும். "என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே" இந்த சொல் ஏழை எளியோரைக் கொடுமைப்படுத்திக் துன்புறுத்துவோரே.... தேவன் இல்லை என்றும் கூறும் மதி கெட்டவர்கள் ( அறிவிலிகள்) இவர்கள் ஏழைகளுக்கு நல்லது செய்ய மாட்டார்கள், எளியோரை நசுக்கிக் கசக்கிப் பிழிவார்கள். எனவே இவர்கள் கடவுளை அடைய முடியாது, கடவுளை நோக்கி மன்றாட முடியாது, என்பதைக் குறிக்கின்றது.

**வச:6- சிறுமைபட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார்** திருமறையில் சொல்லப்படும் கடவுள் அடிமைகளின், ஏழைகளின், சிறுமைப் பட்டவர்களின் ஆண்டவர் என்பதை இங்கு புரிந்துக் கொள்ளலாம். அவர்களுக்கு கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார்.

**3. சங்கீதம்:14:7- எளியோரின் வாழ்விற்காக வேண்டுதல்**

**வச:7- வளமான வாழ்வு** கடவுள் எளியோருக்கு புதிய வாழ்வு, அமைதி, நீதியை கொடுக்க வேண்டும் என்று ஜெபிக்க அழைப்பு கொடுக்கப்படுகிறது.


**நிறைவாக.....**


இன்றைக்கும் ஆண்டவரின் பிள்ளைகள் என்று சொல்லிக்கொண்டு நீதி, நேர்மை, உண்மை, அன்பு இவற்றைத் தவிர்த்து ஏழை எளிய மக்களை நசுக்கு கின்றோம். இவற்றை விட்டுவிட்டு ஆண்டவரின் அன்பு, நீதி, உண்மை இவற்றைக் கடைபிடித்து எளியோரின் வாழ்வுக்காக ஜெபிக்க பணி செய்ய உதவியாக இருக்க அழைக்கப்படுகிறோம். இந்து தன்மைகளை பெற்றுக்கொள்ள ஆண்டவரின் கரங்களில் நம்மை அர்ப்பணிப்போம்.....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்.....

Rev.S.P.Baskar






**முன்னுரை**

**லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள்; மூத்தவள் பேர் லேயாள், இளையவள் பேர் ராகேல்.**

NOW LABAN HAD TWO DAUGHTERS, THE NAME OF THE OLDER WAS LEAH, AND THE NAME OF THE YOUNGER WAS RACHEL.

-ஆதி:29:16/GEN:29:16

ரெபேக்காளின் சகோதரன் லாபானுக்கு இரண்டு மகள்கள் இவர்களின் பெயர் லேயாள், ராகேல் யாக்கோபு தன் மாமன் வீட்டில் ஏழு ஆண்டுகள் வேலை செய்து அதற்கு கூலியாக இளைய மகள் ராகேலைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார். ஆனால் லாபான் வேறு விதமாகத் திட்டமிட்டு மூத்த மகள் லேயாளை திருமணம் செய்து வைக்கிறார் ( ஆதி:29:23) திருமணமான முதல் நாள் உறங்கி விழித்த பின்பு யாக்கோபுக்கு அவர் விரும்பிய இளைய பெண் ராகேல் இல்லை எனத்தெரிய வருகிறது.( ஆதி:29:25) இதனால் புலம்புகின்றார். மூத்த மகள் இருக்கும்போது இளைய மகளைத் திருமணம் செய்து கொடுப்பது வழக்கமல்ல என லாபான் கூறுகிறார். எனவே இன்னும் ஏழு ஆண்டுகள் வேலை பார்த்துவிட்டு இளைய மகளைத் திருமணம் செய்து கொள் என்கிறார். எனவே யாக்கோபு பதினான்கு ஆண்டுகள் வேலை செய்து உழைத்து திருமணம் செய்து

கொள்கிறார். இந்த லேயாளும், ராகேலும் தந்தையின் வீட்டில் அதிக வசதிகளுடன் வாழ்ந்தவர்கள், ஆனால் சமூக ரீதியாக சுயமாக வாழவும், முடிவெடுக்கவும் தெரியாதவர்களாய் இருந்தார்கள். தன் தந்தையின் சொல்லுக்கு மறுப்பு சொல்லாமல் வாழ்ந்து வந்தார்கள்.

**கடவுளையும் - கணவனையும் இணையாக பார்த்தவர்கள்**

இவர்கள் தந்தைவழி பண்பாட்டை மையப்படுத்தி வாழ்ந்து வந்ததால், கடவுளையும், கணவனையும் இணையாகப் பார்த்தார்கள். மனைவி கணவனை நேசிக்கவும், மதிக்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தார்கள். இதில் ஒன்றும் தவறில்லை, ஆனால் கணவனை கடவுளாக வழிபடும் மரபில் காணப்பட்டார்கள், காரணம் குடும்பத்தின் தேவைகளுக்காக உழைப்பதால் கடவுளையும், கணவனையும் ஒன்றாக பார்த்தார்கள் தங்கள் கணவரை ஆண்டவர் என்று அழைத்தார்கள். இதற்கு காரணம் சிறுவயதில் இவர்களுக்கு திருமணம் செய்யப்பட்டது. சற்று யோசித்துப் பார்த்தால் கடவுளின் பார்வையில் இருபாலரும் சமம் என்பதை உணர்ந்துகொள்ள பக்குவம் இல்லாத நிலையில் இருந்தார்கள் என்பதை புரிந்துகொள்ள கொள்ள முடிகிறது. அத்துடன் கணவனை தன்னுடன் ஏற்றுக்கொள்வதற்கு "காதற் பழம்" கொடுப்பதாக வரலாறு கூறுகிறது. ஆதி:30:14-இல் "தூதாயீம் பழம்" என்றும் ஆங்கிலத்தில் "MANDRAKES" பழம் என்றும் கூறப்படுகிறது. இதை லேயாள், ராகேலுக்குக் கொடுத்து தன் கணவனை தன்னிடம் ஒரு நாள் தக்கவைத்துக் கொண்டார் என்று ஆதி: 30:14-18- வரை உள்ள பகுதியில் பார்க்க முடிகிறது. இது பெண்கள் கணவரை எப்படி நேசித்து இருக்கிறார்கள் என்பதை அடையாளப்படுத்துகிறது.


**குழந்தைப் பருவத்தில் திருமணம் முடித்தவர்கள்**

இஸ்ரயேலர் ஆரம்பம் காலக்கட்டத்தில் கூட்டுக் குழுவாக வாழும் வாழ்க்கை வாழ்ந்தவர்கள், இவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு இளம் வயதிலேயே திருமணம் முடித்து வைத்தனர். 12 முதல் 13 வயதிற்குள் திருமணம் முடித்துவிடுவார்கள் அப்படித்தான் லேயாளும், ராகேலும் குழந்தைப் பருவத்தில் திருமணம் முடித்தவர்கள். இளம் வயதில் திருமணம் முடித்து, குடும்ப உறவில்

ஈடுபட்டு, குழந்தைகளை பெற்றெடுத்து வளர்ப்பது என்பது எவ்வளவு சிரமமாயிருக்கும். ஓடியாடி விளையாட வேண்டிய வயதில் இவர்கள் குடும்பப் பொறுப்பை ஏற்றார்கள், இருப்பினும் லேயாளும், ராகேலும் மிகவும் திறமையாக வாழ்வை கையாண்டார்கள். லேயாளுக்கு ஆறு மகன்களும், ஒரு மகளும் பிறந்தார்கள் ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன் மற்றும் தீனாள். (ஆதி:35:23-26). இப்படி சவாலான வாழ்க்கையை இவர்கள் வாழ்ந்தார்கள்.

**ராகேல் புலம்பலின் அடையாளம்**

ராகேல் தன் குழந்தைகளுக்காக புலம்புவாள் என்று சொல்லப்பட்ட எரேமியாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது ( எரேமியா: 31:15) ராகேல் என்னும் பெயருக்கு "ஆடு" என்று பொருள் ஆகும். லேயாள் என்னும் பெயருக்கு "மாடு" என்று பொருள் கொள்ளப்படுகிறது. இரண்டு பெண்களின் பிள்ளைகளும் கால்நடை மேய்கிறவர்களாக வாழ்ந்தனர். இரண்டு குலங்களுக்கிடையே மோதல்கள் அதிகமாக இருந்தது, போட்டிகளும் இருந்தது இரண்டு பேரும் ஒரே கணவருக்கு மனைவியாக இருந்தாலும் இரு துருவங்களாகவே பார்க்கப்பட்டனர்.



**லேயாள் துதித்தலின் அடையாளம்**


யாக்கோபு ராகேலை அதிகமாக நேசித்ததினால், லேயாள் அதிகமாக மனம் நொந்து போயிருந்தார். இதனால் சோர்ந்து போகவில்லை கடவுள் என் கணவர் மூலமாக பிள்ளைகளைக் கொடுத்தார் என்றும் கணவருடன் கொண்ட உறவுகளை, பாசத்தை நினைத்துப் பார்த்து கடவுள் லேயாளின் தாழ்வை நோக்கியதை (ஆதி:29:32) நினைத்து கடவுளை துதித்தார். தாங்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கும் வாழ்வை எண்ணி மகிழ்ச்சி கொண்டார், இதனால் கடவுளை துதித்தார் என்பதை புரிந்துகொள்ள கொள்ள முடிகிறது...

இன்றைக்கும் அநேக சூழ்நிலைகளில் பெண்களின் நிலை இப்படித்தான் இருக்கின்றது, குடும்பம், சமுதாயம் அவர்களின் வாழ்வில் பல்வேறு இன்னல்களை ஏற்படுத்துவதால் பல நிலைகளில் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள் இப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இறைப்பணியில் உங்கள் ஆயரம்மா.........

*Mrs.E.Nancy Baskar.*





# உதறி தள்ளிவிட்டு முன்னேறுங்கள்

## SHAKE IT OFF AND STEP UP

*கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த தேவ பிள்ளைகளே!!*

*தேவன் நல்லவராகவே இருக்கிறார்.*

***“அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை, கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்”***

***- சங்கீதம் 37:24***

*ஆம் பிரியமானவர்களே, நாம் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை. அதாவது அழிந்துபோவதில்லை/ வெட்கப்பட்டுப்போவதில்லை. ஏனென்றால் கர்த்தருடைய கரம் நம்மை தாங்குகிறது. நாம் விழுந்து போகும் போதெல்லாம் ஆண்டவர் நமக்கு ஞானத்தையும் நல்ல ஆலோசனையும் பலனையும் தந்து நம்மை காத்து நடத்துகின்றார்.*

*நாம் செய்ய வேண்டிய ஒரு காரியம் என்னவென்று பின்வரும் ஒரு சிறுகதையின் மூலம் உங்களுக்கு விளக்க விரும்புகின்றேன்:*

*வயதான ஒரு கோவேறு கழுதை ( MULE ) தண்ணீரற்றதும், சிறிது ஆழமுமான கிணற்றுக்குள் தவறி விழுந்து விட்டது. அந்த கழுதை மேலே வர உதவிக்கு வெகு நேரம் கத்தி கொண்டு இருந்தது. இதைக்கேட்ட அந்த கிராமத்து மக்கள் கழுதையை வெளியே கொண்டுவர முயற்சித்தும் முடியவில்லை. எனவே, கிராம மக்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். நாம் இந்த கிணற்றை குப்பையை போட்டு கழுதையுடன் மூடி விடலாம் என்று, பிறகு ஊரில் உள்ள குப்பைகளை எல்லாம் கொண்டு வந்து கிணற்றில் கொட்டி அதை மூட ஆரம்பித்தார்கள். அந்த கோவேறு கழுதை என்ன செய்தது என்று தெரியுமா? ஒவ்வொரு முறை குப்பை அதன்மேல் விழும் போதெல்லாம் தன் உடம்பின் மேல் உள்ள குப்பைகளை உதறித் தள்ளிவிட்டு அந்த குப்பைகளை படிகளாக மாற்றி கொஞ்சம்*

கொஞ்சமாக மேலே உயிருடன் வந்து சேர்ந்தது. அது அங்கிருந்த அனைத்து கிராமத்து மக்களுக்கும் ஆச்சரியத்தை அளித்தது.

தேவபிள்ளைகளே, நாமும் கூட நம் வாழ்க்கையில் விழுந்து விடும் போதெல்லாம் கர்த்தர் மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவர் கரம் நம்மை தாங்குகிறது என்ற நம்பிக்கையோடு உலகப்பிரகாரமான பாடுகளை (தோல்வி, பயம், இழப்பு, போராட்டம், அவமானம், பொறாமை, கவலை) நம்மேல் போட்டுக்கொள்ளாதவர்களாய் உதறி தள்ளிவிட்டு முன்னேறுவோம் ( SHAKE IT OFF AND STEP UP ). ஆண்டவருடைய வழிநடத்துதலுக்கு கீழ்ப்படிந்து வாழ்க்கையில் வெற்றி பெறுவோம்.

நாம் செய்ய வேண்டியது என்ன - உதறி தள்ளிவிட்டு முன்னேறுவோம் ( SHAKE IT OFF AND STEP UP ).

*ARTICLE BY*

## SIS. VIMALA NICSON

WOMEN'S Fellowship



# இயேசுவில் நிலைத்திருத்தல்

**யோவான் 15:1-10**




*இயேசுவில் நிலைத்திருக்கிற வாழ்க்கை உங்களுக்கு உண்டா? அநேகர் இயேசுவில் நிலைத்திருக்கவில்லை. இயேசுவை தவிர மற்றவைகளில்தான் நிலைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளுகிறார்கள். ஒருவர் இயேசுவில் நிலைத்திருக்கிறாரா இல்லையா என்பதை கீழ்காணும் மூன்று காரியங்களில் இருந்து அறிந்துக்கொள்ளலாம். அவைகள் யாவன?*

**முதலாவது,** *அவரில் நிலைத்திருக்கிறவன் தேவனுக்கென்று மிகுந்த கனிகளைக் கொடுப்பான்.*

**'நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்'**

**- யோவான் 15 : 5**

*நீங்கள் அவரில் நிலைத்திருக்கும்போது அநுதினமும் ஆவிக்குரிய சத்துவத்தைப் பெறுவீர்கள். உங்கள் வாழ்க்கை ஆவிக்குரிய நற்கனிகளைக் கொடுப்பதோடு அநேகம் ஆத்துமாக்களைக் கர்த்தருக்குள் கொண்டுவரும். உங்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்.*




***இரண்டாவதாக,*** *தேவனிடத்திலிருந்து ஜெபங்களுக்குப் பதிலைப் பெற்ற ஒரு ஜெப வாழ்க்கை உங்களுக்கு இருக்கும். நீங்கள் தேவனிடத்தில் ஜெபிக்கும்போது ஆச்சரியமான விதங்களில் தேவன் உன் ஜெபத்திற்கு பதிலளிப்பதைக் காண்பீர்கள். இன்னும் அது உன் ஜெப வாழ்க்கைக்கு ஊக்கத்தைக் கொடுக்கும்.*

***மூன்றாவதாக,*** *நீங்கள் தேவனுடைய பிள்ளை என்பதின் நிச்சயத்தை அது உங்களுக்கு கொடுக்கும். நீங்கள் வெட்கப்பட்டுப் போகமாட்டீர்கள். ஆவிக்குரிய தைரியத்தைக் கொண்டவர்களாக நீங்கள் வாழுவீர்கள்.*

**‘பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்‘.**

***-1யோவான் 2:28***

*அன்பானவர்களே! தேவனில் நிலைத்திருக்கிற வாழ்க்கையை வாஞ்சித்து அதற்காக ஜெபியுங்கள்.*

YOUTH FELLOWSHIP




*கிருஸ்த்துக்குள் அன்பான சகோதர்களே உங்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் தோத்திரங்கள் . இந்த மாதத்தில் இயேசு நம்கூட இருந்து வழிநடத்துவார் நம் வாழ்க்கையில் ஆபத்து வராது என்று நாம் சொல்ல முடியாது. இந்த உலகத்தில் நாம் அநேக ஆபத்துக்களைக் கடந்து வாழ வேண்டியதாக இருக்கிறது. ஆனால் ஆபத்துக்காலத்தில் நாம் சோர்ந்துபோக கூடுமா? இயற்கையாகநம்முடைய வாழ்க்கையில் ஆபத்து வேளைகளில் சோர்ந்து போக வாய்ப்பு உண்டு. ஆனால் இதை நாம் எவ்விதம்மேற்கொள்வது? ஆபத்தை நான் நிச்சயமாய் கடந்து போக வேண்டியதாக இருக்கும். அதை நான் வெற்றியோடு கடந்து போக விரும்புகிறேன் என்று நீங்கள் சொல்வீர்களானால், உங்களுடையவாழ்க்கையில் ஆவிக்குரிய விசுவாசம், பெலம் தேவை. இந்த உலகத்தின் ஞானத்தினாலோ, மாம்சத்தினாலோ வாழ்க்கையில் நீங்கள் வாழ நினைக்கும்பொழுது, நீங்கள் சோர்ந்து போவது நிச்சயம். ஆனால் நீங்கள் ஒரு விசுவாசியாக இருப்பீர்களானால், இன்றைய வாழ்க்கையில் தேவன் உங்களை பலப்படுத்தவும், நீங்கள் தேவனிடத்திலிருந்து பலத்தைப் பெற்று வாழவும் அறிந்த ஒரு நபராக இருப்பீர்கள். " (1சாமு 27:1). தாவீதும் தன்னுடைய வாழ்க்கையில்சவுலினால் நெருக்கப்பட்ட நிலையில் "தாவீது: நான் எந்த நாளிலாகிலும் ஒரு நாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவதுஎன்னைக் கண்டுபிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகும்படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும்படிக்கும், நான் பெலிஸ்தரின்தேசத்திற்குப் போய், தப்பித்துக்கொள்வதைப்பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை என்று தன் இருதயத்தில் யோசித்தான். "(சங்கீதம் 89:21). நம் வாழ்க்கையில் நாம் ஆண்டவருடைய கிருபையைச் சார்ந்துகொள்ளத் தவறினால் சோர்ந்துபோவோம். விசுவாசமாய் நம்முடையவாழ்க்கையில் பேசுவோம், நடப்போம். நம்முடைய வாழ்க்கையில் நாம் ஆவிக்குரிய தைரியம் உள்ளவர்களாகக் காணப்படவேண்டும். இந்த உலகத்தில் ஆண்டவர் நம் வாழ்க்கையில் ஆபத்தை அனுமதித்தாலும், அவருடைய சித்தமில்லாமல் அது நமக்கு வருவதில்லை. ஆனாலும் தேவனிடத்தில்அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதுஎன்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த மாதத்தில்நாம் ஆபத்திலும் நம்பிக்கையோடும் தைரியத்தோடும் வாழ முடியும் இயேசு நம்கூட இருந்து வழிநடத்துவார் .*

ஆமென்...


*இப்படிக்கு கிருத்துவின்பணியில்*

**அசோக்குமார் சா**

MEN'S
FELLOWSHIP

# PRIMARY ARTICLE


## CBS - PRIMARY
















Teacher : Mrs. Shaly Melbin

# APRIL

# Congratulations!

## KIDS COLOURING

Jesil Barnice
Jania Preni
Johan Sanjo
Hazel Hartlyn
Reagan Shanç
Kariss Angelo
Chris Gabriel

## CODE WORD

Jania Preni
Hazel Hartlyn
Johan Sanjo
Kariss Angelo
Sherin Shah
Jason Eric

## BIBLE QUIZ

Roshan Joshuva

## CROSSWORD

Johan Sanjo
Sherin Shah
Eric Aaron

## WORD SEARCH

Johan Sanjo
Sherin Shah
Eric Aaron
Jason Eric

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**To Church Email:** csitcalain@gmail.com

# Jacob & 1,2 John

## யாக்கோபு & 1,2.பேதுரு

MAY '22 - QUESTIONS




1. யாருடைய தேவ பக்தி வீணாயிருக்கும்?
2. எது சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது மாயிருக்கிறது?
3. யாருக்கு எதிர்த்து நிற்க வேண்டும்?
4. யார் திரளான பாவங்களை மூடுவான்?
5. எதினால் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறோம்?
6. எதன் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும்?
7. எது மேன்மையாயிருக்கும்?
8. உங்களுடன் தெரிந்துக் கொள்ளப்பட்ட ------------- சபையும் என் குமாரனாகிய -------- உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.
9. எதில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்?
10. எந்த பழமொழியின் படி அவர்களுக்குச் சம்பவித்தது?

### ஏப்ரல்-2022-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. தீத்து:3:10 | 2. பிலோமோன்:1:10 | 3. எபிரேயர்:3:2 | 4. எபிரேயர்:4:8 |
5. எபி:5:10 | 6. எபி:7:28 | 7. எபி:8:8 | 8. எபி:9:22 | 9. எபி:10:35 | 10. எபி:11:30

திருமதி.ஜோனீஷ் ஹெர்ஹெல், திருமதி. ஜெயந்தா ஜான், திருமதி.ஜெயின் ராஜவேல்,
திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன்,
செல்வி.அஜூன்ஷா, செல்வி.ஷெறின்ஷா, திருமதி.ஹெலன் கம்பீரம், திருமதி.ஜமுனா ராணி,
திருமதி.பமீலா டேனியல், திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**
**மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.**

YOUR NAME / BIBLE QUIZ / APR'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

**056 766 8348**

# KIDS COLOURING




YOUR PARENTS

IN EVERYTHING,

FOR THIS PLEASES THE LORD.

COLOSSIANS 3:20

PRIMARY

# On the Road to Emmaus



Then their eyes were opened and they recognized him.
Luke 24:31a (NIV)

The puzzle is based on Luke 24:13-35 (NIV).

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| W | X | Q | T | T | I | Z | H | E | G | H | W | Z | O | R |
| V | O | D | H | L | I | F | G | J | S | E | C | R | O | E |
| Q | P | E | A | Y | N | I | Q | I | H | Y | Q | T | G | U |
| C | E | P | N | A | B | J | L | X | D | E | I | A | T | X |
| T | N | Y | K | D | R | O | I | E | E | S | L | Y | U | H |
| J | E | I | S | E | O | Z | K | F | I | L | C | K | G | R |
| I | D | S | V | F | A | L | L | V | I | G | R | R | J | X |
| B | P | K | T | T | A | H | T | V | K | U | U | S | K | E |
| D | E | R | W | W | B | R | E | A | D | N | C | U | F | I |
| U | S | L | O | C | L | E | O | P | A | S | I | F | V | E |
| O | T | D | I | P | H | F | V | S | C | M | F | F | I | A |
| W | T | I | M | E | H | I | C | J | I | O | I | E | C | D |
| J | M | S | M | C | V | E | Y | K | J | S | E | R | Z | G |
| E | M | M | A | U | S | E | T | Y | L | E | D | P | C | O |
| J | V | K | V | I | D | K | H | J | E | S | U | S | R | Z |

| | | | |
|---|---|---|---|
| WALKED | JESUS | SUFFER | CRUCIFIED |
| MOSES | BREAD | BELIEVE | VISITOR |
| THANKS | FOOLISH | PROPHET | EYES |
| CLEOPAS | OPENED | VILLAGE | EMMAUS |





| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| D | I | S | A | P | P | E | A | R | E | D | D | A | S |
| I | E | G | R | F | T | S | A | P | O | E | L | C | K |
| S | T | A | Y | S | H | U | I | J | N | S | R | B | N |
| C | G | N | I | K | L | A | T | E | D | I | C | S | A |
| I | G | M | E | L | W | K | P | V | P | N | H | I | H |
| P | N | N | X | S | Q | O | O | T | S | G | E | M | T |
| L | V | Y | I | A | I | E | U | H | P | O | A | O | A |
| E | I | G | I | N | F | R | H | E | J | C | R | N | B |
| S | L | N | L | J | E | M | R | L | D | E | T | C | L |
| U | L | E | D | S | Z | V | O | O | P | R | S | Q | E |
| A | A | V | N | A | K | B | E | R | A | B | S | U | R |
| M | G | E | U | A | E | D | X | D | S | D | E | C | S |
| M | E | L | A | S | U | R | E | J | T | Z | Y | G | S |
| E | W | E | V | E | X | F | B | R | O | K | E | A | W |

# Wordsearch

DISCIPLES
ROAD
EMMAUS
JERUSALEM
TALKING
JESUS
CLEOPAS
VILLAGE
STAY
EVENING
TABLE
BREAD


THANKS
BROKE
EYES
OPENED
RECOGNISED
DISAPPEARED
SCRIPTURES
HEARTS
ELEVEN
THE LORD
RISEN
SIMON



WORD CROSS

# ABRAHAM

# SENIOR
*& above*







## ACROSS

6. First wife's original name
7. Abraham's original name
8. A daughter-in law
12. First son
15. Land promised to Abraham's descendants
16. Last wife

## DOWN

1. Wicked city destroyed by God
2. Wicked city destroyed by God
3. A grandson
4. First Wife
5. Wife's handmaiden
9. King of the Philistines
10. Second son
11. I will make of you a great __
13. A grandson
14. A nephew

# Happy Birthday

# May

| | |
|---|---|
| 01-May | MS. ALEN MAISIE |
| 01-May | Mstr. JOYSON STUBERT |
| 03-May | MR. ASHOK KUMAR |
| 05-May | MRS. LAVANYA KANNAN |
| 06-May | MRS.SHANNA LILIYA D/O SIMEYON |
| 07-May | REV. S. P. BASKAR |
| 08-May | BABY. JESIL BERNICE |
| 08-May | Mr. ARUN KUMAR |
| 09-May | MR. ANBU DAS |
| 11-May | MR. RAJESH CHELLADURAI |
| 13-May | MR. SELVISTOR SOLOMON |
| 14-May | MR. KUMAR |
| 15-May | MR. GEORGE ROSE |
| 16-May | MR. A SELVAKUMAR |
| 16-May | MR. BASKAR JOHNSON |
| 16-May | MRS. NIRMALA JENIFER PAUL |
| 18-May | MR. R ARULDHAS |
| 19-May | MRS. SALINI VIMALA KINGSLY |
| 19-May | MR. ROBERT WILSON. T |
| 19-May | MR. VIJIN RAJ. P |
| 20-May | MR. PUSHPARAJ.B |
| 20-May | MS.FELICIA LEENUS OBED D/O LEENUS PATRICK OBED |
| 22-May | ISWARYA OBED W/O LEENUS PATRICK OBED |
| 23-May | MR. C. HAVIN HEBA |
| 25-May | DR. SHINO P MATHEW |
| 25-May | MR. MAHENDRAN. R |
| 26-May | MS.J. H. JUANA |
| 29-May | MS.KERENHAPPUCH ABISH D/O JEYAKUMAR |
| 29-May | MR. JOHN SOLOMON |
| 29-May | MS.RISHITA KANNAN |

# Happy Anniversary

| | |
|---|---|
| 02- May | MR. LEENUS PATRICK OBED and ISWARYA OBED |
| 04- May | MR. LAWRANCE GAMBEERAM & MRS. AUGUSTA LAWRANCE |
| 06- May | MR. R ARULDHAS & MRS. PRASSANA |
| 07- May | DR. SHINO P MATHEW & DR. SHELLY KURIAN |
| 12- May | MR. SELVA KUMAR & MRS. RADHIKA GRACE |
| 13- May | MR. JOHN JOSEPH & MRS. JESSY BEULA |
| 16- MAY | MR. SIMIYON & MRS.BASIL SHALLU |
| 25- May | MR. DAVID SORNABALAN & M. YESUBAI |
| 25- May | MR. VIJIN RAJ & MRS. PAMELA JENIFFER |
| 26- May | MR. Y. MESIAH DAS &. MRS. SUJA JASMINE |
| 26- May | MR. RAJESH CHELLADURAI & MRS. SHALINI |

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

# BIBLE

# QUIZ

## ஏசாயா புத்தகத்திலிருந்து

## ( THE BOOK OF ISAIAH)

## MAY 14

**ENROLL YOUR NAMES BEFORE 7 MAY**



# HELLO May

**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**